தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1984 மார்ச் 7.

(மாசி 24, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு—2015.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் எண்கள் 68, 69, 70 மற்றும் 71 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வீராணம் திட்டம்.

* 72. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. சி. ரா. லெட்சுமி காந்தன் சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க, வீராணம் திட்டத்தை நிறைவேற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : எதிர்காலத்திலாவது வீராணம் திட்டத்தில் மாற்றம் செய்து, அதைப் பயனுள்ளதாக ஆக்கி எடுத்துக்கொள்ளும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : விராணம் திட்டம் ஒரு பக்கம் அப்படியே இருந்தாலும் கூட, வீராணத்திலிருந்து இப்போது இருக்கிற அளவிலே தென்னாற்காடு மாவட்ட்த்தை உள்ளடக்கிய இடங்களுக்கு அத்திட்டத்தைப் பயன்படுத்தி தண்ணீர் கொடுக்க வழிவகை செய்யப்படுமா ? வீராணம் திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட பைப்புகள் சில இடங்களிலே தண்ணீர் கொண்டு வருவதற்கு ஏற்ற வகையிலே போடப்பட்டிருக்கின்றன. இன்னும் சில இடங்களில் அப்படியே பைப்புகள் கிடக்கின்றன. அரசு அவற்றைப் பயன்படுத்தி தென்னாற்காடு மாவட்டத்தை உள்ளடக்கிய பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால், இன்னும் விளக்கமாக பதில் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வீராணம் திட்டத்தை நிறைவேற்று வதற்கு முன்னாலே 'டெக்னிகல் பீசிபிலிட்டி ரிப்போர்ட்' ஒன்று தயாரிக்கப்பட்டதா ? அதற்குப் பிறகு கவர்னர் ஆட்சிக் காலத்திலே ஒரு 'டெக்னிக்கல் பீசிபிலிட்டி ரிப்போர்ட்' அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டதாக அறிகிறேன். அந்த அறிக்கையை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வீராணம் எல்லையிலிருந்து தினமும் சென்னை நகருக்கு 40 மில்லியன் காலன் தண்ணீர் வினியோகம் செய்ய அந்தத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1968-ல் 21.37 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டது. 1970-ல் வீராணம் திட்டத்திற்கான வேலைகள் தொடங்கப்பட்டன. வீராணம் திட்டத்தை நிறைவேற்றுவதில் பல முறைகேடுகள் நடந்துள்ளன. மூன்றில் ஒரு பங்கு வேலை கூட முடிக்கப்படவில்லை. 1975க்குப் பிறகு திட்ட வேலைகள் தொடரப்படவில்லை. நவம்பர் 1978 வரை இத்திட்டத்திற்காக ரூபாய் 22.17 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதில் பெறப்பட்ட கடனுக்கான வட்டித் தொகை சேர்க்கப்படவில்லை. இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் பரிசீலனை செய்து, இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்தவிதமான பலனும் இல்லை, பணமும் விரயம் என்று கைவிடப்பட்டது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வீராணம் திட்டத்திற்கு செலவிடப்பட்ட பணம் பற்றியும், நிறைவேற்றியதற்குப் பிறகு ஏற்பட்ட குறைபாடுகள் பற்றியும், ஏன் கைவிடப்பட்டது என்பது பற்றியும் நான் கேட்கவில்லை.

1984 மார்ச் 7]

வீராணம் திட்டத்தைத் தொழில் நுட்ப ரீதியாக நிறைவேற்றுவது சாத்தியம் தான், 'டெக்னிகல் பீசிபிலிட்டி' தான் என்று அதிகாரிகள் அறிக்கை கொடுத்துள்ளதாக அறிகிறேன். அந்த அறிக்கையை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எல்லாவற்றையும் பரிசீலனை செய்து அந்தத் திட்டம் பரிசீலனையில் 2.5 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர் கொண்டு வர 150 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப் பட்டது. எனவே 'it is not worthy of consideration' என்பதால் கைவிடப்பட்டது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னுடைய நேரடியான கேள்வி அந்தத் திட்டம் டெக்னிகலி பீசிபிளா இல்லையா என்பதுதான். செலவுபற்றி நான் கேட்கவில்லை. 'டெக்னிகலி பீசிபில்தான' என்று நிபுணர்கள் அறிக்கை கொடுத்துள்ளார்கள். நான் இப்போது அறிய விரும்புவதெல்லாம் நிபுணர்கள் கொடுத்த அந்த ரிப்போர்ட்டிலே ஏதாவது குறை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதைப்பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து அந்தத் திட்டம் தேவையில்லை, அது உபயோககரமானது அல்ல என்று கைவிடப்பட்டது.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சம்பந்தமாக இரண்டு ஆலைகள் கான்கிரீட் பைப் உற்பத்திக்காகக் கட்டப்பட்டன. அவை இப்போது உபயோகப்படுத்தப்படுகின்றனவா ? ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட பைப்புகள், இப்போது ரோடுகளில் கிடக்கின்றன. அவைகளை மீண்டும் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பானதாக இல்லையென்றாலும், பதில் சொல்கிறேன். இந்தப் பைப்புகள் பயன்படுத்தப்படவில்லை. அதைப்பற்றி விளக்கமான பதில் வேண்டுமானால், அதைப்பற்றி விளக்கமான கேள்வி கேட்கலாம். இன்னும் அதிர்ச்சி தரக்கூடிய தகவல்கள் இருக்கின்றன. அவைகளைத் தருகிறேன்.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிபுணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் என்னவென்றால், அந்த பைப்புகள் தண்ணீரைச் சுமக்க தகுதியானவை அல்ல என்பது: ஆதலால் அவை புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன. அது இப்போது எந்த நிலையில் இருக்கின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், 32,000 குழாய்கள் செய்ய வேண்டியதில், 10,000 குழாய்கள் செய்து, நாலாயிரத்துக்கு மேற்பட்ட குழாய்கள் புதைக்கப்பட்டு, அந்தக் குழாய்கள் 'சப் ஸ்டாண்டர்ட்' என்று சொல்லி, கைவிடப்பட்டன. இது என்னுடைய நினைவு.

(திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா எழுந்தார்.)

இருங்கள். இன்னும் நான் உட்காரவில்லையே. (சிரிப்பு) எனவே இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டோம். குறிப்பாக, பின் பாயிண்ட் பண்ணி கேள்வி கேட்டால் அதற்குத் தகுந்த பதில் கொடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நிபுணர்கள் குழு (டெக்னிகல் பியூப்பிள்), கவர்னர் ஆட்சிக் காலத்தில் இதைப்பற்றிப் பரிசீலித்து, அறிக்கை கொடுத்ததா ? அதில் (டெக்னிகல் பீப்பிள்) தொழில் நுணுக்க முறையில் இந்தத் திட்டம் சாத்தியமானது என்று சொல்லியிருக்கிறதா என்று தான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் இந்த அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது.

செயற்கை மழை.

* 73. **வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1983-ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் குடிநீர் பற்றாக் குறையைப் போக்க, சென்னை மாநகரிலும், சென்னை நகரைச் சுற்றிலும் செயற்கை-மழை பெய்யச் செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?